IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.9/2022**

**நாள்– 04.10.2023**

**மோசஸ்**

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்தில் இறந்தவர் என்னுடைய மகன் ஆவார். அவருடைய வயது, வேலை, வருமானம் ஆகியவற்றைக் காண்பிக்கும் ஆவணங்களைத் தாக்கல் செய்திருக்கிறேன். விபத்திற்கு முன்பாக அவர் ஆடி கார் கம்பெனியில் வேலை பார்த்து மாதம் ரூ.40 ஆயிரம் சம்பாதித்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன். ம.சா.ஆ.11 ல் பிடித்தம் போக மாத சம்பளம் ரூ.12 ஆயிரம் என்றும், பிடித்தம் போக ரூ.11,500/– என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். என்னுடைய மகன் நிறுவனம் நடத்தியதற்கும், அதற்கான வரவு செலவிற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு 2 மகன்கள். விபத்தில் இறந்தவர் என்னுடைய இளைய மகன் ஆவார். என்னுடைய மூத்த மகன் தனிக்குடித்தனமாக சென்னையில் வசித்து வருகிறார். நான் கிறிஸ்துவ தேவாலயத்தில் மத போதகராக இருந்து வருகிறேன். என்னுடைய குடும்பம் நடந்ததுவதற்கான அன்றாட ஜீவனத்திற்கான வருமானம் மட்டுமே கிடைக்கும். விபத்தில் இறந்தவரின் வருமானத்தைச் சார்ந்து நான் இருக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். நான் தான் விபத்து சம்பந்தமாக இந்த மனு தாக்கல் செய்வதற்கு தகவல் கூறினேன். என்னுடைய மகன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் என்னுடையதாகும். அதற்கு காப்பீடு உள்ளது. இந்த விபத்து சம்பந்தமாக என்னுடைய வாகனம் காப்பீடு செய்த நிறுவனத்திற்கு தகவல் தெரிவித்து வாகனத்திற்கு இழப்பீடு எதுவும்பெறவில்லை. விபத்து சம்பந்தமாக நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை நானே எழுதிக்கொடுத்தேன். நிரூபண

வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்து தான் கையெழுத்திட்டிருக்கிறேன். விபத்தின்போது என்னுடைய மகன் திருநெல்வேலி–தென்காசி ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருந்தார். அப்போது டிஎன் 76 பிஇ 1721 வாகனத்தில் வந்தவர் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து மேற்கு புறமாக திரும்பியிருக்கிறார். அவ்வாறு திரும்பும்போது என்னுடைய மகன் ஓட்டிச் சென்ற வாகனத்தின் பெட்டியில் இடித்து கீழே விழுந்திருக்கிறார். டிஎன் 76 பிஇ 1721 வாகனத்தில் வந்தவர் திரும்பாமல் இருந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். விபத்திற்கு டிஎன் 76 பிஇ 1721 வாகனத்தில் வந்த நபர் எவ்வித சமிஞ்ஞையும் செய்யாமல் திடீரென்று திரும்பியது தான் காரணம் என்றால் சரியல்ல. இந்த விபத்து குற்ற வழக்கு சம்பந்தப்பட்ட பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த 2 ஆவணங்களைத் தாக்கல் செய்தால் தான் ரோட்டின் எந்த பகுதியில் விபத்து நடந்தது என்ற உண்மை விபரம் தெரியவரும் என்றால் சரியல்ல. இந்த விபத்து குற்ற வழக்கு சம்பந்தமாக யார் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்ற விபரம் நாளது தேதி வரை எனக்கு தெரியாது. அந்த குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் யாருடைய கவனக்குறைவினால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் என்னுடைய மகனின் எந்தெந்த பகுதியில் காயங்கள் ஏற்பட்டது என்று தெரியும். விபத்து நடந்த சமயத்தில் உரிய தலைக்கவசம் அணியாமல் இருந்ததால் தான் தலையில் ஏற்பட்ட காயங்களினால் உயிரிழப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. தலைக்கவசம்அணிந்திருந்தால் உடைந்த தலைக்கவசத்தின் பகுதிகள் சிதறியிருக்கும் என்றும், அதை காவல்துறையினர் பார்வை மகஜரில் குறிப்பிட்டிருப்பார்கள் என்றாலும் சரியல்ல. இந்த விபத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் மீது எவ்வித தவறும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த விபத்தின்போது 1ம் எதிர்மனுதாரர் உதவி செய்தபோது அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழுக்காரணமும் டிஎன் 76 பிஇ 1721 வாகனத்தை ஓட்டிய 5ம் எதிர்மனுதாரர் தான் என்றால் சரியல்ல. அதனால் நான் நஷ்ட ஈடு பெறவேண்டும் என்றால் 3, 7 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. பல்வேறு

தலைப்புகளில் கோரப்பட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றும், 3ம் எதிர்மனுதாரரைப்பொறுத்து இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த குறுக்குவிசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**

**6ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

காவல் துறையில் நான் புகார் அளித்ததன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையானதாகும். முதல் தகவல் அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரரைத் தான் குற்றவாளியாக காண்பிக்கப்பட்டிருக்கிறது. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் புலன்விசாரணை செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் மீது தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நான்கொடுத்த புகாரில் என்னுடைய மகன் ஓட்டிச் சென்ற வாகனம் நிலை தடுமாறி 3, 4 எதிர்மனுதாரர்களின் வாகனமான டிஎன் 72 பிஇ 1721 பைக்கின் பெட்டியின் மீது மோதி விபத்து நடந்ததாகக் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு 407 வாகனத்தை ஓட்டி வந்த 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரிதான். இந்த 407 வாகனம் என்னுடைய மகன் மீது மோதாமல் இருந்திருந்தால் என்னுடைய மகன் உயிருடன் இருந்திருப்பார் என்றால் சரிதான். இந்தவிபத்திற்கு 4, 5 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக சம்பந்தமில்லை என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய நபர் சாலை விதிகளைக் கடைபிடித்து மெதுவாகத்தான் வந்திருக்கிறார் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் தவறுதலாக டிஎன் 76 பிஇ 1721 மோட்டார் சைக்கிள் என் மகனின் வாகனத்தில் மோதிவிட்டதாக தவறுதலாக தட்டச்சு பிழை ஏற்பட்டிருக்கிறது என்றால் சரிதான். என் மகன் சாலை விதிகளை கடைபிடித்து மெதுவாகத்தான் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும்இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் தான் காரணம் என்று கூறியிருக்கிறேன். முதல் தகவல் அறிக்கையும், குற்றப்பத்திரிக்கையும் 1ம் எதிர்மனுதாரர் மீது பதிவுசெய்யப்பட்டிருப்பதால் 4 முதல் 7

எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரிதான். எனக்கு ஏதாவது இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் 407 வாகனத்தின் உரிமையாளர், ஓட்டுநர் மற்றும் காப்பீடு நிறுவனம் தான் வழங்கவேண்டும் என்றால் சரிதான்.

**<u>7 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்து சமயத்தில் என்னுடைய மகன் எனக்கு பாத்தியப்பட்டவாகனத்தில் தான் பயணம் செய்தார். என்னுடைய மகன் சாலை விதிகளை அனுசரித்து மெதுவாகத்தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். என்னுடைய மகன் பயணம் செய்த வாகனத்தின் மீது 4 ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனம் மோதியதால் காயம் ஏற்பட்டும், 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற லாரி என் மகன் மீது மோதியதால் இறப்பும் ஏற்பட்டது என்றால் சரிதான். என்னுடைய வாகனத்தை 7 ம் எதிர்மனுதாரரிடத்தில் காப்பீடு செய்திருந்தேன். இந்த விபத்து சம்பந்தமாக 7 ம் எதிர்மனுதாரருக்கு தகவலும் கூறவில்லை, எவ்வித கோரிக்கை மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய மகன் சரியாக வாகனத்தை ஓட்டிச் சென்றதால் 7 ம் எதிர்மனுதாரரைத் தவிர மற்ற எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரிதான். 7 ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.10.04 18:16:55 +0530